விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 226 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 17 செவ்வாய்க்கிழமை (02.08.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## 22ஆவது திருத்த சட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம்

### நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ



(கொழும்பு)

அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தச்சட்டமூல வரைபிற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

திருத்தச்சட்டமூல வரைபினை இவ்வார காலத்திற்குள் பாராளுமன்றில் சமர்ப்பிக்க எதிர்பார்ப்பதாக நீதி, சிறைச்சாலைகள் விவகாரம் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகா 11

### இலங்கையின் இன்றைய அவல நிலைக்கு

## சிறுபான்மை மக்கள் இலக்கானதே காரணம்

### இந்திய ரிசேர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர்



*(கொழும்பு)*

இலங்கையின் இன்றைய அவல நிலைக்கு சிறுபான்மை மக்களை அரசியல்வாதிகள் இலக்கு வைத்ததே காரணம் என இந்திய ரிசேர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் ரகுராம் ராஜன் தெரிவித்துள்ளார்.

*(11 ஆம் பக்கம் பார்க்க)*

## டீசலின் விலை ரூ.10 ஆல் குறைப்பு

(கொழும்பு)

டீசலின் விலை 10 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய ஒட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் புதிய விற்பனை விலை 430 ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளது. 11

### " கோட்டா கோ கமவின் "

## செயற்பாட்டாளர் ரெட்டா கைது

### மேலும் மூவருக்கு பயணத்தடை

(கொழும்பு)

"கோட்டா கோ கமவின்" மற்றொரு செயற்பாட்டாளர் ரெட்டா என அறியப்படும் ரதிந்து சேனாரத்ன கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். 11

## கோட்டா நாடு திரும்ப சரியான தருணமல்ல

ஜனாதிபதி ரணில் 03 ஆம் பக்கம் பார்க்க

### மொட்டுக் கூட்டணியிலிருந்து

## சூழ்ச்சிக்காரர்களை வெளியேற்ற நடவடிக்கை

### சாகர காரியவசம் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

"அரசின் பிரதான பங்காளிக் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியிலிருந்து சூழ்ச்சிக்காரர்களை வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்" என பொதுஜன முன்னணியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் எம்.பி. தெரிவித்தார். 11

## இராணுவம் பொறுமையாகவுள்ளது; உச்ச அதிகாரம் பயன்படுத்தப்படும்

### பாதுகாப்பு செயலாளர் கடும் எச்சரிக்கை



(கொழும்பு)

மூன்று மாதங்களாக இராணுவம் பொறுமையாக காத்துக் கொண்டிருக்கின்றது.

போராட்டங்கள் என்ற போர்வையில் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு எதிராக அதிகபட்ச அதிகாரம் பயன்படுத்தப்படும் என பாதுகாப்புச் செயலாளர் கமல் குணரத்ன தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் பாராளுமன்றக் குழுவில் உரையாற்றிய போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் அடிப்படைச் சட்டத்தின் 11

### ஜனாதிபதி ரணில்

## மக்களின் நம்பிக்கையை வெற்றிகொள்ள வேண்டும்

### சம்பிக்க ரணவக்க

(கொழும்பு)

பாராளுமன்றில் பொதுஜன பெரமுனவின் நம்பிக்கையை வென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களின் நம்பிக்கையை வெற்றிகொள்ள வேண்டும். பொதுஜன பெரமுனவிற்கு மக்கள் மத்தியில் நன்மதிப்பு கிடையாது என பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

ஜனாதிபதியின் 11

## மானிப்பாயில் வீதி விபத்து

### மூவர் படுகாயம்

(அராலி)

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மானிப்பாய் சந்தியில் நேற்று இரவு இடம் பெற்ற விபத்தில் மூவர் படுகாயமடைந்துள்ளனர். அவர்களில்ஒருவரது நிலை கவலைக்கிடமாக 11

## தென்னிலங்கையில் சீரற்ற காலநிலை

- இருவர் பலி; பலர் பாதிப்பு
- ரயில் சேவை முடங்கியது
- மீனவர்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

தென்னிலங்கையில் சீரற்ற காலநிலை காரணமாக இருவர் உயிரிழந்ததோடு பலர் பாதிப்படைந்துள்ளனர் மேலும் மலையகத்துக்கான 11

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# யா/யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி

## அதிபர் திருமதி மிமலாதேவி விமலநாதன் அவர்களின்

# மணிவிழா வாழ்த்து



### சேவை நயந்து பாராட்டுகின்றேன்



யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியம் இலங்கையின் கல்வி வரலாற்றில் தனித்துவமான பல இயல்புகளைக் கொண்டது. குறிப்பாக பெண் கல்வி மரபு என்பது யாழ்ப்பாணத்தில் இற்றைக்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன்னரேயே ஆரம்பமாகிவிட்டது.

கல்லூரியின் அதிபர் ஆசனத்தை அலங்கரித்த பெண் ஆளுமைகள் ஈழத்துப் பெண் கல்வி மரபில் கனதியான செல்வாக்கினைக் கொண்டவர்கள். இன்று திருமதி மிமலாதேவி விமலநாதன் அவர்களும் அத்தகைய உயர்ந்தோர் வரிசையில் ஒருவராகத் தனது கல்விச் சேவையில் நிறைவு காண்கின்றார். அதிலும் குறிப்பாக திருமதி மிமலாதேவி விமலநாதன் அவர்கள் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் மாணவி, ஆசிரியை, அதிபர் எனும் முந்நிலை வகிபாகங்களைக் கொண்டவர்.

கல்வித் துறையில் கனதியான பங்காற்றிய திருமதி மிமலாதேவி விமலநாதன் அவர்கள் நீடித்த நித்திய ஆரோக்கியத்துடன் நிறைவாக வாழ எல்லாம் வல்ல பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானைப் பணிந்து வாழ்த்துகிறேன்.

**பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா**
**துணைவேந்தர் - கணிதப் பேராசிரியர்**
**யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.**

### சாதனையாளர்



மணிவிழா நாயகி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எனது மாணவி. ஆசிரியப் பணியின் பின் அதிபர் சேவையில் இணைந்து பல வருட அனுபவங்களின் பின் யாழ்ப்பாண இந்து மகளிர் கல்லூரியில் பணியாற்றிவரும் இவர் ஆற்றலும், ஆளுமையும் மிக்கவராகத் திகழ்கின்றார்.

இவரது காலத்தில் கல்லூரி பல்துறைகளில் பெருவளர்ச்சி கண்டுள்ளது. புதிய மாடிக் கட்டடங்கள், ஆய்வுகூடம், நுழைவாயில் மற்றும் புனருத்தாரணப் பணிகள் இவரின் சாதனைகள். மேலும் இக் கல்லூரியில் இருந்து இன்று பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்குச் செல்லும் மாணவர் தொகை துரிதமாக அதிகரித்துச் செல்கின்றது. இக் கல்லூரி தேசியப் பாடசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டதும் சிறப்புக்குரியது.

**பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை**
**PhD Durham**
**வாழ்நாள் பேராசிரியர், முன்னாள் துணைவேந்தர்.**

### மணிவிழா வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் அதிபர் திருமதி மிமலாதேவி விமலநாதன் அம்மையார் அவர்களுடைய மணிவிழாவுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தியத் துணைத் தூதரகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட சர்வதேச யோகா தினம், சர்வதேச நடன தினம், இந்திய சுதந்திர தினம், குடியரசு தினம் மற்றும் ஏனைய கலாசார நிழ்வுகள் அனைத்திற்கும் யாழ்.இந்து மகளிர் கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுடைய பங்களிப்புகள் குறிப்பிடத்தக்கவை. மறக்கமுடியாதவை. அவர்கள் பங்கெடுத்த அனைத்து நிகழ்வுகளிலும் அனைவரதும் பாராட்டுக்களையும் பெற்றனர். இதற்கு அவர்களது வழிகாட்டுதல்களும் ஊக்கமுமே காரணம்.

இவ்வாறான சிறப்புக்கள் கொண்ட அம்மையாரது மணிவிழா நன்நாளில் திருமதி மிமலாதேவி விமலநாதன் அவர்களை மனதார வாழ்த்துகின்றேன்.

**ஆ.நடராஜன்**
**யாழ்ப்பாணத்திற்கான முன்னாள்**
**இந்திய துணைத் தூதுவர்**

### மணிவிழா வாழ்த்துச் செய்தி



மணிவிழா காணும் யாழ். இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி மிமலாதேவி விமலநாதன் அவர்களை வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றேன்.

மணிவிழா நாயகியின் காலத்தில் பாடசாலையின் பௌதிக வளங்கள் பெரிதும் அபிவிருத்தி அடைந்திருந்தன. மிகவும் சுறுசுறுப்புடன் செயற்படும் இவர் தனது பணியில் கண்ணும் கருத்துமாய் இருந்து பாடசாலையை வெற்றிகளூடாக முன்னோக்கிச் செல்ல பணியாற்றியவர். மணிவிழா நாயகி ஓய்வுக்குப் பின் தனது குடும்பத்தினருடன் சீரும் சிறப்புமாய் வாழ இறைவனை வேண்டுகின்றேன்.

**ந.தெய்வேந்திரராஜா**
**முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**யாழ். வலயம்.**

### வாழ்த்துகின்றேன்



மணிவிழா நாயகி திருமதி மிமலாதேவி விமலநாதன் அவர்களின் மணிவிழா நாளில் அவரை வாழ்த்தி மகிழ்கின்றேன்.

இன்முகம், இனியசொல் என இறைவன் என்றும் உம்மில் குடி கொண்டிருப்பார்.

பலநூறு மாணவர்களை கல்வி அறிவு, தொழில் அறிவு, ஒழுக்கம் என்பவற்றில் உயர்ந்து விளங்க நீங்கள் காரணகர்த்தாவாக இருந்தீர்கள். உங்களது ஓய்வுக்காலம் சீரும் சிறப்புடனும் அமைய இறைவனை வேண்டுகின்றேன்.

**அருளேஸ்வரி வேதநாயகம்**
**ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**யாழ்ப்பாணம்.**



## திருமதி மிமலாதேவி விமலநாதன் SLPS I

(B.A (Hons), PGDE, M.Ed )

### சேவை விபரம்


**ஆசிரியர் சேவை**

1. கிளி/வட்டக்கச்சி மகா வித்தியாலயம்
   1989 - 1995
2. கிளி/திருவையாறு மகா வித்தியாலயம்
   1995 - 1997
3. வவு/இறம்பைக்குளம் மகா வித்தியாலயம்
   1997 -
4. திரு.சாம்பல்தீவு மகா வித்தியாலயம்
   1998 -
5. திரு/உவர்மலை விவேகானந்தா வித்தியாலயம்
   1998 - 2002

**அதிபர் சேவை**

6. திரு/உவர்மலை விவேகானந்தா வித்தியாலயம்
   2002 - 2005
7. யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தியாலயம்
   2005 - 2009
8. யா/சன்மார்க்க வித்தியாலயம்
   2009 - 2012
9. யா/யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி
   2012 -

### ஆசிரியர் நலன்புரிக் கழக தலைவரின் வாழ்த்துரை



ஆசிரியராகவும் அதிபராகவும் பல பாடசாலைகளில் பணியாற்றி அனுபவங்களைப் பெற்று 2012இல் எமது கல்லூரியைப் பொறுப்பேற்று சிறப்புறச் சேவையாற்றுகின்றார். இவரது மலர்ந்த செழிப்பான முகம், நல்ல தொடர்பாடல் திறன், ஆழமான சிந்தனை, காத்திரமான பேச்சுத்திறன், மனிதநேயப் பண்பு, செயற்திறன் என்பன என்னை கவர்ந்தன. ஆளுமைமிக்க அதிபரான இவர் பல சவால்களின் மத்தியில் பொறுமையுடன் வெற்றி கண்டவர்.

மணிவிழாக் காணும் திருமதி மிமலாதேவி விமலநாதனின் வாழ்க்கை சீருடனும் சிறப்புடனும் அமைய எல்லாம் வல்ல இராஜவரோதயப் பெருமானை வேண்டிநிற்கின்றேன்.

**திரு. சிவநாதன் றஜீவன்**
**தலைவர், ஆசிரியர் நலன்புரிக் கழகம்,**
**யா/யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி.**

### வாழ்த்துச் செய்தி



யாழ். மாவட்டத்தில் சிறந்ததோர் மகளிர் பாடசாலையாகத் திகழும் யா/ யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் வளர்ச்சியில் திருமதி மிமலாதேவி விமலநாதன் ஆற்றிய பணிகள் அளப்பரியவை இப் பாடசாலை ஏறத்தாழ 2000 மாணவிகளைத் தன்னகத்தே கொண்டதாக சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுத் தரும் மாகாணப் பாடசாலைகளில் ஒன்றாக விளங்குகின்றது. இப் பாடசாலை மாணவிகள் இணைப் பாடவிதான செயற்பாடுகளிலும் சிறப்பான சாதனைகளை தொடர்ந்தும் வெளிக்காட்டி வருகின்றனர்.

இவர் தனது சேவைக் காலத்தில் கல்வித் துறைக்கு ஆற்றிய பணிகளுக்கு எனது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதோடு இவர் பணி தொடர வாழ்த்துகின்றேன்.

**செ. உதயகுமார்**
**மாகாணக் கல்விப் பணிப்பாளர்,**
**வடக்கு மாகாணம்.**

### ஆளுமைமிக்க அதிபருக்கு மணிவிழா வாழ்த்துக்கள்



வடபுலத்தின் கல்விக் கண்ணாகிய யாழ்ப்பாணத்தின் தனித்துவ அடையாளங்களில் ஒன்றாக திகழும் யாழ். இந்து மகளிர் கல்லூரியின் சிறப்புமிக்க அதிபர் திருமதி மிமலாதேவி விமலநாதன் அம்மணி அவர்கள் தனது அறுபதாவது அகவையினை அடைந்து மணிவிழா காணுகின்றார். ஆளுமைமிக்க பெண்ணாக சிறப்பாக செயற்பட்ட அம்மணிக்கு எமது மணிவிழா வாழ்த்துக்கள்.

கடந்த 10 ஆண்டு காலமாக யாழ். இந்து மகளிர் கல்லூரியின் அதிபராக இருந்து பாடசாலையின் பண்புத் திறனை, கல்வியடைவை, பௌதிக வளத்தை என செயற்றிறன் மிக்க வகையில் நல் மாற்றங்களை ஏற்படுத்திய ஒருவர் இன்று தேசிய பாடசாலையாக பரிணமிக்கும் வகையில் இம்மாற்றங்கள் இடம்பெற்றிருக்கின்றன என்பது முக்கியமானது.

இவரின் ஓய்வுக்கு பின்னரான வாழ்வு மகிழ்ச்சியாகவும் நலமாகவும் இருக்க எமது வாழ்த்துக்கள். வாழ்க பல்லாண்டு.

**முத்து இராதாகிருஷ்ணன்**
**வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**யாழ்ப்பாண வலயம்.**

### சாதனைப் பெண்ணாய் தடம் பதித்தவர்



யாழ். இந்து மகளிர் கல்லூரியின் அதிபராகப் பொறுப்பேற்று பாடசாலை செயற்பாடுகள் அனைத்திலும் உயர் அடைவு மட்டங்களை ஏற்படுத்திய மணிவிழா நாயகி திருமதி மிமலாதேவி விமலநாதன் அவர்களுக்கு மணிவிழா வாழ்த்துக்கள்.

இப்பாடசாலையில் கடந்த 10 ஆண்டுகளாக சோதனைகளையும் சவால்களையும் தாண்டி விஞ்ஞான, கணித துறைகள் உட்பட க.பொ.த உயர்தரத்தில் மாணவர்களை உயர் நிலைப் பெறுபேறுகளைப் பெற வைத்த பெருமை இவரையே சாரும். இவரின் ஓய்வுக்காலம் சீரும் சிறப்புமாய் அமைய வாழ்த்துகின்றேன்.

**திரு.நா.சிவனேசன்**
**கோட்டக் கல்விப் பணிப்பாளர்,**
**கோட்டக் கல்வி அலுவலகம்,**
**நல்லூர்.**

### மணிவிழாக் காணும் திருமதி வி. மிமலாதேவி அதிபர் அவர்களுக்கு வாழ்த்துக்கள்



மணிவிழாக் காணக்கூடிய அருமையான அனுபவத்தை எட்டியுள்ள திருமதி வி.மிமலாதேவி அதிபர் அவர்களின் ஆரோக்கியம் நிறைந்த நல் வாழ்வுக்காகவும் பூரண மனித மாண்புமிக்க சேவைக்காகவும் எல்லாம் வல்ல பார்வதி பரமேஸ்வரன்பாதங்களைப் பணிந்து பிரார்த்திக்கின்றேன்.

பாடசாலையின் மனித வளங்களை விருத்தி செய்வதிலும் பௌதிக வளங்களை விருத்தி செய்வதிலும் கற்றல்- கற்பித்தல் செயற்பாடுகளை வினைத்திறனுடையதாக ஆக்கும் வகையிலும் மதிநுட்பமும் மனித நேயமும் கொண்ட செயல் வீரியாக அவர் சிரித்த முகத்துடன் மல்லிகைப் பூ மணங்கமள ஆசிரியர்களையும் மாணவர்களையும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களையும் அரவணைத்து செயற்படும் பாங்கு அவருக்கே உரிய தனித்துவம் வாய்ந்த பண்பாளரும் ஆவார்.

**திரு.ம.சத்தியகுமார்**
**செயலாளர்,**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,**
**யா/ யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி.**

### மணிவிழா மங்கைக்கு மனமார்ந்த வாழ்த்து



எமது கல்லூரித் தாயின் புகழுக்கும் வளர்ச்சிக்கும் தனது சேவைக் காலத்தில் அதிபராக ஆற்றிய அயராத பணிக்கு நன்றிகூறுவதோடு, கல்லூரி மென்மேலும் வளர்ச்சியடையவும் அதிபர் அவர்கள் உடல், உள ஆரோக்கியத்தோடு நீடூழி வாழவும் நடுத்தோட்ட இராஜவரோதய விநாயகரை வணங்கி வாழ்த்தி நிற்கிறேன்.

வாழ்க பல்லாண்டு; வளர்க நும்பணி

**ஓம்சக்தி யயோதன்**
**பழைய மாணவிகள் சங்க செயலாளர்,**
**யாழ்/ இந்து மகளிர் கல்லூரி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு
# இந்தியா எப்போதும் உதவும்
## குடியரசு தலைவர் திரௌபதி முர்மு தெரிவிப்பு

**(டில்லி)**
**பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கைக்கு உதவ இந்தியா உறுதிபூண்டுள்ளதாக குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.**



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு எழுதியுள்ள கடிதத்திலேயே இந்திய குடியரசுத் தலைவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

குடியரசுத் தலைவராக பதவியேற்றமைக்கு வாழ்த்து தெரிவித்து ரணில் விக்கிரமசிங்க அனுப்பிய கடிதத்திற்கு நன்றி தெரிவித்து அவர் குறித்த கடிதத்தை அனுப்பியுள்ளார்.

பொருளாதார சிக்கலால் ஏற்படும் சவால்களை சமாளிக்க இலங்கை மக்களுக்கு உதவ இந்தியா துணை நிற்கும் என குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு குறிப்பிட்டுள்ளார். (நி)

# கோட்டா நாடு திரும்ப இது சரியான தருணமல்ல
## ஜனாதிபதி ரணில்

(கொழும்பு)


முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்புவதற்கு இது சரியான தருணமல்ல.

அவர் தற்போது நாடு திரும்பினால் அரசியல் பதற்றங்கள் மேலும் தீவிரமடையலாம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷ விரைவில் நாடு திரும்புவார் என்பதற்கான தகவல் எதுவும் தனக்கு கிடைக்கவில்லை என அவர் தெரிவித்தார்.

நாட்டை ஆட்சி செய்த முறைக்காக கடும் எதிர்ப்பை எதிர்கொண்ட ராஜபக்ஷ, அவர் பதவி விலகவேண்டும் என விடுக்கப்பட்ட வேண்டுகோள்களை தொடர்ந்து ஜூலை 13 ஆம் திகதி நாட்டிலிருந்து தப்பியோடிய பின்னர் பதவியை இராஜினாமா செய்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# ஜனாதிபதி மாளிகையின் இணையத்தை பயன்படுத்தியவர்களுக்கு பொலிஸார் அழைப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி மாளிகையில் உள்ள Wi-Fi ஐ பயன்படுத்தி சந்தேகத்துக்கிடமான முறையில் இணையத்தில் தொலைபேசி அழைப்புகளை மேற்கொண்ட பலர் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி மாளிகையை கைப்பற்றிய பின்னர் இணையத்தை பயன்படுத்தி இவர்கள் அழைப்புகளை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸார் தற்போது தொலைபேசி தரவு பதிவுகளை ஆய்வு செய்து வருவதாகவும், தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை , ஜனாதிபதி மாளிகைக்குள் நுழைந்து அங்கிருந்த உடைமைகளுக்கு சேதப்படுத்திய 100 இற்கும் மேற்பட்டவர்களின் கைரே கைகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அந்த கைரே கைகள் தொடர்பில் விசார ணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (நி)

# QR முறைமைக்கு
## 50 இலட்சம் வாகனங்கள் பதிவு

(கொழும்பு)

நாட்டில் எரிபொருள் விநியோக நடவடிக்கைக்காக அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட தேசிய எரிபொருள் அட்டை ஊடான கியூ.ஆர். முறைமைக்கு 50 இலட்சம் வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக வலுசக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தின் உத்தியோகபூர்வமாக அறிமுகப்படுத்தப்பட்ட இணையதளத்தின் ஊடாக மாத்திரம் பதிவு செய்யுமாறும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப திணைக்களம் பொது மக்களை கேட்டுக் கொண்டுள்ளது.

கியூ.ஆர். குறியீட்டின் மூலம் எரிபொருளை விநியோகிக்கும் நடைமுறை நேற்று முதல் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. (நி)

# சமையல் எரிவாயுவின் விலை குறைகின்றது

(கொழும்பு)

எதிர்வரும் 5ஆம் திகதி முதல் சமையல் எரிவாயுவின் விலையை குறைக்க லிட்ரோ நிறுவனம் தீர்மானித்துள்ளது.

என லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் அறிவித்துள்ளார். (நி)

# தமிழ்தேசியக் கூட்டமைப்புடன் ஜனாதிபதி விரைவில் சந்திப்பு

(கொழும்பு)

"சர்வகட்சி அரசுக்கு ஆதரவு வழங்குமாறு கோரி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனுப்பியுள்ள கடிதத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சாதகமான பதிலைத் தெரிவித்துள்ள நிலையில், அக்கட்சியின் தலைவர் தலைமையிலான அணியினருடன் ஜனாதிபதி நேரில் பேச்சு நடத்துவார்" என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது "சர்வகட்சி அரசு தொடர்பில் சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேரில் பேச்சு நடத்துவார். இதன் போது, சர்வகட்சி அரசுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒத்துழைப்பு எந்தவிதத்தில் அமையும் என்பது தொடர்பில் ஜனாதிபதி கேட்டறிவார்.

தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான கட்சியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திகழ்கின்றது. எனவே, நாட்டின் தேசிய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒத்துழைப்பும் பங்களிப்பும் இன்றியமையாதது" என பிரதமர் தெரிவித்தார். (நி)

## சட்டவிரோதமாக
# பிரான்ஸ் செல்ல முயன்ற 50 பேர் பொலிஸாரால் கைது


(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் பிரான்ஸ் செல்ல முயன்ற குற்றச்சாட்டில் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த 50 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வென்னப்புவ - கொலின்ஜாடிய பகுதியில் சட்டவிரோதமாக படகு மூலம் பிரான்ஸுக்கு செல்ல முற்பட்ட சுமார் 50 பேரை நேற்று அதிகாலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்களில் 6 பெண்களும் 4 சிறுவர்களும் அடங்குவதாக பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது.

அவர்கள் வவுனியா, சிலாபம், மாரவில, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)





யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவ பெருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நிலையில் சம்பிரதாய பூர்வமாக கொடியேற்றத்துக்கான கொடிச்சீலை எடுத்துவரும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. செங்குந்தர் பரம்பரையினரால் நல்லூர் ஆலயக் கொடியேற்றத்திற்கான கொடிச்சீலை சம்பிரதாய பூர்வமாக ஆலுயத்தில் ஒப்படைக்கப்படுவது பாரம்பரிய வழக்கமாகும். அதன்படி யாழ். சட்டநாதர் சிவன் ஆலயத்திற்கு அருகில் உள்ள வேல் மடம் முருகன் ஆலயத்தில் நேற்றுக் காலை 9 மணிக்கு நடைபெற்ற விசேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து அங்கிருந்து கொடிச்சீலை மாட்டு வண்டிலில் பருத்தித்துறை வீதி ஊடாக எடுத்துச் செல்லப்பட்டு நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தினை வந்தடைந்தது. அங்கு சுபநேரத்தில் பூஜைகள் இடம்பெற்று கொடிச்சீலை நல்லூர் ஆலய பிரதம குருக்களிடம் கையளிக்கப்பட்டது.

(படங்கள்: சிவசாந்தன், ரவிசாந், கஜிந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீலங்கா கிரிக்கெட் பிரிவு III-2022

# 18 ஆவது தகுதிகாண் போட்டியில்

# கிறாஸ்கொப்பர்ஸ் அணி வெற்றி




ஸ்ரீலங்கா கிரிக்கெட் பிரிவு III தொடரின் 18 ஆவது தகுதிகாண் போட்டியில் கிறாஸ்கொப்பர்ஸ் அணி, ஸ்ரான்லி அணியை 235 ஓட்டங்களால் வெற்றி பெற்றதுடன் பிரிவு G யில் இரண்டாம் இடத்தை கைப்பற்றியுள்ளது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற போது 46.5 ஓவர்க்ளில் சகல இலக்குகளையும் இழந்து 344 ஓட்டங்களை பெற்றது.

துடுப்பாட்டத்தில் சுஜீவன்-73, அஜித்-71, ரசிகரன்-48, கோகுல்-38, ஜனன்தன்-32, வரலக்ஸன்-22 ஓட்டங்களை பெற்றனர்.

பந்துவீச்சில் ஸ்ரான்லி அணி சார்பாக மதன் 9.5 ஓவர்களில் 72 ஓட்டங்க்ளை கொடுத்து 4 இலக்குகளையும், கஜமுகன் 5 ஓவர்களில் 29 ஓட்டங்களை கொடுத்து 02 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி அணி 31 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 109 ஓட்டங்களை பெற்றது. துடுப்பாட்டத்தில் விஷ்னுகரன்-36, மதன்-28 ஓட்டங்களைப் பெற்றனர்

கிறாஸ்கொப்பர்ஸ் அணியை சார்ந்த ரசிகரன் 3 ஓவர்களில் 9 ஓட்டங்களை கொடுத்து 5 இலக்குகளை கைப்பற்றினர்.

இது பிரிவு III இல் சாதனையாக அமைந்துள்ளது. இப்போட்டியின் மூலம் பிரிவு G யில் யாழ்.ஜொனியன்ஸ் அணி முதலாம் இடத்தையும் கிறாஸ்கொப்பர்ஸ் அணி இரண்டாம் இடத்தையும் கைப்பற்றியுள்ளது.

இப்போட்டியின் மூலம் யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ந்து 13 வருடங்களாக நடத்தி வரும் யாழ்.நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்விற்கு கிறாஸ்கொப் பர்ஸ் அணி 11.79 புள்ளிகளையும், ஸ்ரான்லி அணி 2.09 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க)

# கியூ.ஆர் முறை மூலம் விநியோகிக்கப்படும் எரிபொருள் போதுமானதாக இல்லை

## முச்சக்கரவண்டிகள் உரிமையாளர் சங்கம்

அரசாங்கத்தினால் வழங்கப்படும் கியூ.ஆர்.குறியீடு முறை மூலம் விநியோகிக்கப்படும் எரிபொருள் போதுமானதாக இல்லை என்று அகில இலங்கை முச்சக்கரவண்டிகள் சாரதிகள் சங்கம் அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

முச்சக்கர வண்டிகள் சாரதிகள் சங்கத்தின் தலைவர் சுதில் ஜயருக் கருத்து தெரிவிக்கையில்,

முச்சக்கரவண்டிகளுக்கு கிடைக்கப் பெறும் 5 லீற்றர் எரிபொருள் போதுமானதாக இல்லை. அதனைக்கொண்டு வாரத்திற்கு அல்ல. ஒரு நாளைக்கு மாத்திரம் கூடப் பயன்படுத்த போதுமானதாக இருக்காது.

தற்போது நாடளாவிய ரீதியில் 11 மில்லியனுக்கும் அதிகமான முச்சக்கரவண்டிகள் எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்கு கியூ.ஆர். முறை மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதில் சுமார் 7.5 மில்லியன் முச்சக்கரவண்டி சாரதிகள் முச்சக்கரவண்டியை செலுத்துவதை தொழிலாக செய்து வருகின்றனர்.

11 மில்லியன் முச்சக்கரவண்டிகள் பதிவு செய்யப்பட்டு இருந்தாலும் அதில் முச்சக்கரவண்டி செலுத்துவதை தொழிலாக கொண்டுள்ள 7.5 மில்லியன் முச்சக்கரவண்டிகள் சாரதிகளுக்கு மாத்திரம் எரிபொருளைப் பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமாயின் சாதாரணமாக வாரம் ஒன்றுக்கு 15 லீற்றர் எரிபொருள் வழங்கப்பட வேண்டும்.

முச்சக்கரவண்டி தொழில் செய்பவர்கள் நாளொன்றுக்கு 8 மணி நேரம் சாலையில் அலைந்து தொழில் புரிகின்றனர். ஒரு நாளைக்கு 150 கிலோ மீற்றர்கள் பயணிக்கிறார்கள் என்றார். (ம-7)

# வட்டுக்கோட்டையில் வாளுடன் வந்தவர் மடக்கி பிடிப்பு

வட்டுக்கோட்டையில் நேற்று வாளுடன் வந்த மூவரில் ஒருவர் இளைஞர்களால் மடக்கி பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்ட பின்னர் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

மூளாய் - வேரம் பகுதியைச் சேர்ந்த மூவர் வாள்களுடன் தாக்குதலுக்கு வந்தவேளை இரண்டு வாள்களுடன் சந்தேகநபர் ஒருவர் மடக்கி பிடிக்கப்பட்டு வட்டுக்கோட்டை பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் மற்றையவர்கள் இருவரும் தப்பித்துச் சென்றுள்ளனர். (ம-7,104)

6 ஆம் ஆண்டு
நினைவஞ்சலி
அமரர்
வைரமுத்து செல்வராசா
திதி : 02.08.2022

ஆறாண்டு மறைந்தாலும்
ஆறாது எம் துயரம்
ஆண்டாண்டு ஆனாலும்
நீங்காது உம் நினைவுகள்
கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்



பண்டித்தறை, நெல்லியடி,
கரவெட்டி.
(C-4690)
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா பல்கலைக்கழகத்திற்கு விரைவில் மருத்துவபீடம்

## துணைவேந்தர் மங்களேஸ்வரன் தெரிவிப்பு

(வவுனியா)

வவுனியா பல்கலைக்கழகத்திற்கு மருத்துவபீடம் ஒன்றை அமைப்பதற்கான திட்ட முன்மொழிவை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கிகாரத்திற்காக சமர்ப்பிக்கவுள்ளதாக துணைவேந்தர் ரி.மங்களேஸ்வரன் தெரிவித்தார்.

வவுனியா பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டு நேற்றுடன் ஒரு வருடம் பூர்த்தியாவதை முன்னிட்டு இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

வவுனியா வளாகமாக இருந்த எமது நிறுவனம் தனிப் பல்கலைக்கழகமாக தரமுயர்த்தப்பட்டு இன்றுடன் ஒரு வருடம் கடந்துள்ளது. இந்தக் காலப் பகுதியில் பல்வேறுபட்ட சவால்களிற்கு மத்தியில் பல விடயங்களில் முன்னேற்றம் அடைந்துள்ளோம். அந்த வகையில் நல்லிணக்க மையம் ஒன்றை உருவாக்கியுள்ளோம். அத்துடன் சர்வதேசத்தினைச் சேர்ந்த மாண்வர்களும் இங்கு வந்து கற்கை நெறிகளை பயில்வதற்கான நடவடிக்கைகளினை முன்னெடுத்துள்ளோம். அத்துடன் விசேடதேவைக்குட்பட்டவர்களிற்கான அலகு ஒன்றை ஆரம்பித்து அவ்வாறாக சமூகத்தில் உள்ளவர்களின் பிரச்சினைகளை அடையாளம் கண்டு அவர்களுக்குத் தேவையான அனுசரணை வழங்கும் செயற்பாடுகளை முன்னெடுத்திருக்கிறோம். அத்துடன் எமது பாரம்பரியத்தையும் கலாசாரத்தையும் அறியும் பொருட்டு கலாசார நூதனசாலை ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மருத்துவபீடம் ஒன்றை அமைப்பதற்கான முன்மொழிவை எமது மூதவையும் பேரவையும் ஏற்றுக் கொண்டுள்ளது. தற்போது அதற்கான திட்ட முன்மொழிவினை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பவுள்ளோம். இதன் மூலம் வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையையும் ஒரு போதனா மருத்துவமனையாக தரமுயர்த்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம் என அவர் தெரிவித்தார். (நி-299)

# அத்தியாவசிய ஊழியர்களுக்கு எரிபொருள் வழங்கும் பணி

## இரண்டாம் நாளாக முன்னெடுப்பு

(தருமபுரம்)

அத்தியாவசிய ஊழியர்களுக்கு எரிபொருள் வழங்கும் பணி நேற்று இரண்டாம் நாளாக முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி கரைச்சி தெற்கு கூட்டுறவுச் சங்கத்தின் எரி பொருள் நிரப்பு நிலையத்தில் குறித்த விநியோக நடவடிக்கை நேற்று முன்தினம் ஆரம்பமானது.

இதேவேளை, குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில், விவசாயத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், பிரதேச சபை உத்தியோகத்தர்கள், பணியாளர்கள், சுகாதார துறையினர், இலங்கை போக்குவரத்துச் சபை, ஊடக வியலாளர்கள், மாவட்டச் செயலகம், பிரதேச செயலகங்கள், சமுர்த்தி திணைக்கள உத்தியோகத்தர்கள், கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஏனைய திணைக்களங்களில் அத்தியாவசிய சேவையில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள், பணியாளர்களுக்கும் எரிபொருள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-316)

# மகிந்த, பசிலுக்கான பயணத்தடை நீடிப்பு



(கொழும்பு)

மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பசில் ராஜபக்ஷ உள்ளிட்டவர்க்ளுக்கு விதிக்கப்பட்ட வெளிநாடு செல்வதற்கான பயணத்தடை நீடிக்கப்பட்டுள்ளது.

அதன்படி குறித்த தடையை நாளை மறுதினம் 4 ஆம் திகதி வரை நீடித்து உயர் நீதிமன்றம் நேற்று திங்கட்கிழமை உத்தரவிட்டுள்ளது. (நி)

# பிறப்புச் சான்றிதழில் தேசிய அடையாள இலக்கம் உள்ளீடு செய்யும் நடைமுறை ஆரம்பம்

(கொழும்பு)

புதிதாக பிறக்கும் குழந்தைகளுக்கான பிறப்புச் சான்றிதழில் தேசிய அடையாள இலககத்தை உள்ளீடு செய்யும் நடைமுறை நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஆட் பதிவு திணைக்களம்தெரிவித்துள்ளது.

கடந்த 2021 டிசம்பர் 14 திகதி அமைச்சரவை தீர்மானத்துக்கமைய, குழந்தை பிறப்பின்போது, பதிவாளர் நாயகம் திணைக்களத்தினால் வழங்கப்படும் பிறப்புச்சான்றிதழில், ஆட்பதிவு திணைக்களத்தினால் வழங்கப்படும் தேசிய அடையாள இலக்கம் உள்ளீடு செய்யப்படவுள்ளது. மேற்படி இரு திணைக்களங்களுக்கும் இடையில் இணையம் மூலம் தகவல்கள் பரிமாற்றம் இடம் பெறும்.

இந்த புதிய பிறப்புச் சான்றிதழ் வழங்கும் பரீட்சார்த்த திட்டம் கம்பஹா, தெஹிவளை, ஹங்குராங்கெத்த, குருணாகல், இரத்தினபுரி மற்றும் தமன்கடுவ ஆகிய பிரதேச செயலகங்கள் ஊடாக முன்னெடுக்கப்படவுள்ளது.

இவ்வாறு பிறப்புச் சான்றிதழை பெறும் ஒருவர், தனக்கு 15 வயது பூர்த்தியானதன் பின்னர் தேசிய அடையாள அட்டையைப் பெற விண்ணப்பிக்கையில், மேற்படி பிறப்புச் சான்றிதழில் உள்ள அடையாள இலக்கத்திலேயே தனக்கான தேசிய அடையாள அட்டையைப் பெறமுடியும். என ஆட்பதிவு திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி)

# எரிபொருள் விலை குறைந்தால் உணவுப் பொருட்களின் விலையும் குறையும்

(கொழும்பு)

எரிபொருளின் விலை குறைக்கப்பட்டால், உணவகங்களில் உணவு மற்றும் பானங்களின் விலை 20% குறைக்கப்படும் என உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.

எரிவாயு விநியோகமும் உரியமுறையில் விநியோகிக்கப்படும் நிலையில் உணவகங்களை மீண்டும் திறக்க தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 220 | 200 | 280 |
| உருளைக்கிழங்கு | 220 | 220 | 220 | 220 |
| பச்சைமிளகாய் | 450 | 400 | 450 | 500 |
| தக்காளி | 380 | 380 | 450 | 450 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 300 | 280 | 200 |
| கோவா | 350 | 320 | 320 | 350 |
| கரட் | 300 | 300 | 350 | 400 |
| பூசணி | 160 | 180 | 150 | 140 |
| புடோல் | 160 | 100 | 140 | 200 |
| வாழைக்காய் | 160 | 100 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 300 | 350 |
| பெரிய வெங்காயம் | 200 | 210 | 220 | 200 |
| பாகற்காய் | 300 | 300 | 450 | 400 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 80 | 300 |
| கருணைக் கிழங்கு | 180 | 200 | 200 | 300 |
| பயற்றங்காய் | 250 | 250 | 180 | 250 |
| லீக்ஸ் | 250 | 200 | 250 | 250 |
| பீற்றூட் | 150 | 150 | 200 | 200 |
| கறிமிளகாய் | 600 | 700 | 400 | 700 |
| முருங்கைக்காய் | 400 | 350 | 400 | 400 |
| போஞ்சி | 450 | 400 | 450 | 600 |
| கத்தரிதம்புள்ள | 220 | 150 | -- | 250 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 80 | 120 |
| தேசிக்காய் | 400 | 250 | 350 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 60 | 50-80 |
| இராசவள்ளி | 160 | 250 | 200 | 300 |
| வெங்காயப்பூ | 250 | 250 | 200 | 400 |
| முள்ளங்கி | 120 | 120 | 120 | 200 |
| பொன்னாங்கண்ணி | 80 | 90 | 100 | 50 |
| வல்லாரை | 20 | 90 | 30 | 40 |
| ஈரப்பலா | 140 | 150 | 120 | 150 |

# பட்டினியால் வாடும் இலங்கை மக்களுக்கு உதவிக்கரம் நீட்டுங்கள்

## பிலிப்பைன்ஸில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால

(கொழும்பு)

உயர் பணவீக்கம் காரணமாக சுமார் 6 30,000 இலங்கையர்கள் உணவுப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

உலக உணவுத் திட்டம் இதனைச் சுட்டிக்காட்டுவதாகவும், அத்தியாவசிய உணவு, மருந்து, எரிபொருள், உரம் போன்றவற்றைக் கூட பெற்றுக்கொள்ள முடியாமல் இலங்கையர்கள் பெரும் ஆபத்தில் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். பிலிப்பைன்ஸில் கடந்த 30ஆம் திகதி ஆரம்பமான சர்வதேச தலைமைத்துவ மாநாட்டிலேயே முன்னாள் ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும், ஏறக்குறைய மூன்று தசாப்தங்களாக உள்நாட்டுப் போர்ச் சூழல் காரணமாக வீழ்ச்சியடைந்திருந்த இலங்கையின் பொருளாதாரம் 2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதன் மூலம் மீண்டு வருமென இலங்கையர்கள் மட்டுமன்றி சர்வதேச சமூகமும் எதிர்பார்த்தது.

ஆனால், தற்போது நாம் மிகப்பெரிய பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறோம். அந்த நெருக்கடியால் ஏற்பட்ட அரசியல் ஸ்திரமின்மையும் மக்களின் வாழ்க்கைச் சீரகுலைவுகளும் தாங்க முடியாதவை.

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி என்ற வகையில் இந்த இக்கட்டான நேரத்தில் உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பையும் சகோதரத்துவத்தையும் எதிர்பார்க்கின்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘ஆரோக்கியத்தின் பாதையில்’ யாழில் ஈருருளிப் பேரணி






(குப்பிழான்)

பொதுமக்களிடையேயான சுகநலனில் அக்கறை கொள்ளலில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் உலக சுகா தார ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்ப டும் "யாழ் ஆரோக்கிய நகரம்" எனும் செயற்திட்டத்தின் கீழான "ஆரோக்கியத்தின் பாதையில்" எனும் விழிப்பு ணர்வு ஈருருளிப் பேரணி நேற்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக மரு த்துவபீடம் முன்பாக ஆரம்பிக்க ப்பட்ட இந்நிகழ்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத் துணைவேந்தர் சி.சிறிசற்குண ராஜா, பல்கலைக்கழக மருத் துவபீட பீடாதிபதி இ.சுரேந்திர குமாரன், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், யாழ்.போதனா மருத்துவம னைப் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி. த.சத்தியமூர்த்தி, யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணன், யாழ். மாநகர ஆணையாளர் இ.த.ஜெயசீலன், மற்றும் அர சாங்க உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற நிறுவனங்க ளின் பிரதிநிதிகள், பாடசாலை மாணவர்கள் உட்பட்ப் பெரு மளவானோர் கலந்து கொண் டனர். (நி-18-33-104)



யாழ்.சுன்னாகம் கதிரமலைச் சிவன் சொர்ணாம்பிகை அம்பாள் ஆலய வருடாந்த ஆடிப்பூர மஹோற்சவத்தின் தேர்த் திருவிழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு வெகுசிறப்புற இடம்பெற்றது. (படம்- ரவிசாந்)


## பெயர் மாற்ற அறிவித்தல்

8ம் வட்டாரம், மந்துவில், புதுக்குடியிப்பைச் சோந்த அதிரியாம் பெறனவெற்று (556610886V) ஆகிய நான் எனது பெயரினை அதிரியாம் பெர்ணதேத் என பெயர் மாற்றம் செய்கின்றேன் என்பதனை இத்தால் இலங்கை சனநாயக குடியரசில் வாழும் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

வி.பெர்ணதேத்

(12315)

## ஆதனப் பெயர்மாற்றம்

யாழ். மாநாகரசபைக்குட்பட்ட வட்டாரம்-06 ஈச்சமோட்டை வீதி 52/15 ஆதன இலக்கத்தைக் கொண்ட ஆதனம் ஆதனவரிப் பதிவேட்டில் சொந்தக்காரர் என்ற பெயரில் காணப்படுகின்றது.

அதன்கீழ் அட்டவணையில் நன்கு விபரிக்கப்படும் ஆதனம் 21/03/2012ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு அ.விநாயகமூர்த்தி முகதாவில் 2160ம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதி மூலம் victor Nerius Shervantha Johnpullt Wyacinthe Marguerite Jivindira David Nee Johnpulle and Antonius Dinesh Johnpulle வெளிப்படுத்தியுள்ளார்.

பின்னர் குறித்த ஆதனத்தை 2168ம் இலக்கத்தைச் சேர்ந்த அ.விநாயகமூர்த்தி பிரசித்த நொத்தாரிசு முகதாவில் 20.04.2012ம் திகதிய அறுதி உறுதி மூலம் துரைசாமி விஜயகாந்தனிற்கு நிறைவேற்றப்பட்டுள்ளது.

பின்னர் குறித்த ஆதனத்தை 04.08.2012ம் திகதியில் பிரசித்த நொத்தாரிசு அருளம்பலம் இராஜரட்ணம் முகதாவில் 9065ம் இலக்கத்தில் அறுதி உறுதி மூலம் துரைசாமி விஜயகாந்தனால் சந்தியாப்பிள்ளை பத்மநாதன் விஜயரட்ணமும் பெண் அன்ரனிற்றாவுக்கும் விற்பனை செய்யப்பட்டு அறுதியுறுதி நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஆதன அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று சுண்டிக்குளி இறை "வேலன் புலம் வயல்" உறுதிப்படி நெல் பரப்பு 31 குளி 0.96 ஆனால் நில அளவையாளர் டி.புஸ்பராஜா 13.03.2012ம் திகதி தயாரித்த 3488ம் இலக்க நில் அளவைப்படத்தில் துண்டு 1 எனச்சுட்டிய பகுதி நெற்பரப்பு 33 இதே நிள அள்வையாளரால் 12.06.2012ம் திகதி தயாரிக்கப்பட்ட 3488 இலக்கப்படத்தில் குறித்த பகுதி துண்டு 1 தொடக்கம் துண்டு பதினான்கு துண்டுகளாக காட்டப்பட்டதின்படி நில.பரப்பு 22 ஆகும். இதில் துண்டு 3 என்னும் எண்ணால் சுட்டிய பகுதி நில.பரப்பு 2 குளி 02.69 இந்த நிலப்பரப்பு இரண்டு குளி சைபர் இரண்டு தசம் ஆறு ஒன்பதிற்கும் எல்லை

கிழக்கு:- துண்டு பதினான்கு எனச் சுட்டிய பாதை
வடக்கு:- குறித்த படத்தில் துண்டு 2 எனச்சுட்டிய ஆதனம்
மேற்கு:- காளின் ஜோன்பிள்ளையின் ஆதனம்
தெற்கு:- இதன் மிகுதியான துண்டு 4 எனச்சுட்டிய ஆதனம்

இதடங்கலும் இன்னும் முழுக்காணிக்குமாக முழுக்காணியாலும் விடப்பட்டு அமைக்கப்பட்ட பதினான்காம் துண்டான பொதுப்பாதையால் பிரதான பாதைக்கு போக்குவரத்துச் செய்ய குறித்த பாதையில் பாவிப்புரித்தும் தற்போது சந்தியாப்பிள்ளை பத்மநாதன் விஜயரட்ணமும் பெண் அன்ரனிற்றாவும் இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு/ முழுவதிற்கும் உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சந்தியாப்பிள்ளை பத்மநாதன் விஜயரட்ணமும் பெண் அன்ரனிற்றாவும் என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கௌரவ முதல்வர்
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

(C-4687)


# இராசிபலன்

02.08.2022
ஆடி 17, செவ்வாய்கிழமை
பஞ்சமி பின்னிரவு 3.25 மணிவரை

உத்தரம் பிற்பகல் 4.23 மணிவரை
சுபநேரம் 10.33-12.03 மணிவரை
இராகுகாலம் 03.03-04.33 மணிவரை

நல்லைக்கந்தன்
கொடியேற்றம்
சந்திராஷ்டமம்-அவிட்டம்,சதயம்

**வளவன்**


மேஷம்

மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள், தேகநலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், செய்தொழில் மேன்மையுண்டு.


கடகம்

கூட்டு முயற்சிகள் முன்னேற்றம் தரும், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


துலாம்

நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம்.


மகரம்

குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வர வேண்டிய பணவரவுகள் வந்து சேரலாம்.


ரிஷபம்

பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள், மனமகிழ்ச்சியோடு செயற்படும் நாள், கனவுகள் நனவாக கந்தனை வழிபட வேண்டிய நாள், தாழ்ந்த சுபாவமுண்டு.


சிம்மம்

புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நாவண்மையால் நல்ல பெயர் கிடைக்கும், வெளியூர்த்தொடர்புகள் அனுகூலம் தரும், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள்.


விருச்சிகம்

பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்.


கும்பம்

நல்லவர் என நினைத்த ஒருவர் உங்களுக்கு விரோதமாக செயற்படலாம், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம், கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள்.


மிதுனம்

பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.


கன்னி

உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கிச் சாப்பிடுவதில் ஆர்வம் கூடும், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள்.


தனுசு

கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும் நாள், குடும்ப ஒற்றுமை கூடும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும், போசன சுகமுண்டு.


மீனம்

உறவினர் வழியில் மனதிற்கினிய செய்திகள் வந்து சேரலாம், நட்பு வட்டம் விரிவடையும் நாள், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு.

உன் வார்த்தைகளை நம்புகின்றவர்களை உன் செயல்களால் ஏமாற்றி விடாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் ஆதனப் பெயர் மாற்றம்

**இல 193/07,14/12 தெல்லிப்பளை வீதி 1ம் ஒழுங்கை 8/14 வட்டாரம் -10**

வலிகாமம் மேற்கு பிரதேசசபை வட்டுக்கோட்டை உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 10 தெல்லிப்பளை வீதியிலுள்ள இல: 193/07 ம் இலக்க ஆதனம் எமது ஆதன வரிப்பதிவேட்டின் பிரகாரம் திருமதி. N.தங்கராசா என்ற பெயரிலும், தெல்லிப்பளை வீதி 1ம் ஒழுங்கையிலுள்ள இல: 14/12 ம் இலக்க ஆதனம் எமது ஆதன வரிப்பதிவேட்டின் பிரகாரம் சொந்தக்காரர் என்ற பெயரிலும் காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தின் ஒரு பகுதியான தெல்லிப்பளை வீதியிலுள்ள 193/07 ம் இலக்க ஆதனத்தினை சண்முகநாதன் கைம்பெண் பூலோகநாயகி ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு திருமதி.மீ.பாக்கியநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 575/13.12.1989 ம் இலக்க உறுதியால் நடராசா தங்கராஜா பெண் நாகேஸ்வரி ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த ஆதனத்தினை சண்முகநாதன் கருணைநாயகி ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு திருமதி.மீ.பாக்கியநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1009/19.05.1993 ம் இலக்க உறுதியால் குறித்த சண்முகநாதன். கைம்பெண் பூலோகநாயகி ஆகியவரிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த ஆதனத்தின் மற்றைய பகுதியான குறித்த 14/12ம் இலக்க ஆதனத்தினை கந்தசாமி யோகேஸ்வரன் ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ஆ.குமாரசுவாமி முகதாவில் நிறைவேற்றப்பட்ட 3827/01.01.1987 ம் இலக்க உறுதியால் கார்த்திகேசு கந்தசாமி ஆகியவரிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார். குறித்த உறுதியில் அடி உறுதி பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

குறித்த ஆதனத்தினை ஸ்ரீகாந்தன் பெண் கருணைநாயகி ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு மா.தியாகராசா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 5220 /06.10.2002 ம் இலக்க உறுதியால் குறித்த கந்தசாமி யோகேஸ்வரன் ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த 193/07ம் இலக்க , 14/12 ம் இலக்க ஆதனங்களை ஒன்றிணைத்து இராஜசிங்கம் மகள் காயத்திரி ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு திருமதி .எஸ்.சிவபாதம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 8767/16.04.2018 ம் இலக்க உறுதியால் குறித்த ஸ்ரீகாந்தன் பெண் கருணைநாயகி ஆகியவர்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

மேற்படி 193/07 ம் இலக்க, 14/12 ம் இலக்க ஆதனங்களிற்கு இராஜசிங்கம் மகள் காயத்திரி ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனங்கள் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபணை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த 193/07ம் இலக்க , 14/12 ம் இலக்க ஆதனங்களிற்கு இராஜசிங்கம் மகள் காயத்திரி ஆகியவருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனங்களின் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தவிசாளர்/செயலாளர்**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை** (2313)

# NSB பகிரங்க ஏல விற்பனை

தேசிய சேமிப்பு வங்கியின் கீழ் வரும் கிளைகளில் 31.05.2021 இற்கு முன்பு அடகுவைக்கப்பட்டு கீழ் குறிப்பிடப்படும் திகதிவரை மீட்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாத தங்க ஆபரணங்கள் எதிர் வரும் 20.08.2022 தொடக்கம் 28/08/2022 வரையான காலப் பகுதியில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

| | கிளை | அடகு மீட்கப்பட வேண்டிய முடிவு திகதி | பகிரங்க ஏலம் நடைபெற உள்ள திகதி | ஏலம் நடைபெறவுள்ள இடம் |
|---|---|---|---|---|
| 01. | முல்லைத்தீவு, மல்லாவி, | 18/08/2022 | 20/08/2022 | தேசிய சேமிப்பு வங்கி முல்லைத்தீவு |
| 02 | கொடிகாமம், சாவகச்சேரி, கிளிநொச்சி | 18/08/2022 | 20/08/2022 | தேசிய சேமிப்பு வங்கி கொடிகாமம் |
| 03 | சுன்னாகம்,காரைநகர், சங்கானை,மானிப்பாய் | 18/08/2022 | 21/08/2022 | தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம் |
| 04 | நெல்லியடி,அச்சுவேலி, பருத்தித்துறை | 25/08/2022 | 27/08/2022 | தேசிய சேமிப்பு வங்கி நெல்லியடி |
| 05 | மன்னார், வங்காலை | 25/08/2022 | 27/08/2022 | தேசிய சேமிப்பு வங்கி மன்னார் |
| 06 | யாழ்ப்பாணம். யாழ்ப்பாணம் 2 ஆம் கிளை, ஊர்காவற்றுறை திருநெல்வேலி, கோப்பாய். | 25/08/2022 | 28/08/2022 | தேசிய சேமிப்பு வங்கி யாழ்ப்பாணம் |

ஏலத்தை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

வடபிராந்திய முகாமையாளர்
தேசிய சேமிப்பு வங்கி (12312)

# மீண்டும் தீவிரமடையும் கொரோனா!

## அதிக கவனம் செலுத்துமாறு கோரிக்கை

(கொழும்பு)

**நாட்டில் மீண்டும் கொரோனாத் தொற்று அதிகரித்து வருகின்றது.இந்நிலையில் மக்கள் இது தொடர்பில் அதிக கவனம் செலுத்துமாறு பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.**



நாட்டில் அறிகுறிகளுடன் கூடிய நோயாளிகள் பெருமளவில் அதிகரித்து வருகின்றனர். குறிப்பாக பள்ளிகள், நிறுவனங்கள் மற்றும் சமூகக் கூட்டங்கள் நடைபெறும் இடங்களில், அறிகுறிகள் உள்ள நோயாளிகள் காணப்படுகின்றனர்.

ஆனால், இவர்களை நோயாளிகள் என உறுதிப்படுத்த ஆன்டிஜென் சோதனைக் கருவிகள் கிடைக்கவில்லை.

மருத்துவமனை வசதிகள், மருந்துகள் தொடர்பான பிரச்சினைகள் போன்ற காரணங்களால் துரதிஷ்டவசமான மரணங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது, இந்த நிலை மிகவும் துரதிஷ்டவசமான சூழ்நிலையாக மாறியுள்ளது என பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத் தலைவல் உபுல் ரோஹண தெரிவித்தார். (நி)

# சுற்றுலாப் பயணிகளின் வருகையில் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு வரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருவதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஜூலை மாதத்தில் கிட்டத்தட்ட 43,000 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக அதன் பணிப்பாளர் நாயகம் தம்மிக்க விஜேசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு வரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் செல்லும் வாகனங்களுக்கும், சுற்றுலா ஹோட்டல்களின் மின்சாரம் மற்றும் பிற தேவைகளுக்கும் எரிபொருளை வழங்கும் முறை ஏற்கனவே நடைமுறையில் உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதன் படி, இம் மாதத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகை மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்ப்பதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் தம்மிக்க விஜேசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (நி)

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ரோகிணி<br>கி.பா: சூரி. செவ் 5 இல்<br>உயரம்: 5' 6"<br>தகைமை/தொழில்:வியாபாரம்<br>எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/10064 | பிறப்பு: 1993 கிறிஸ்தவம் RC<br>உயரம்:5' 6"<br>தகைமை/தொழில்:BSc<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ:G/10354 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்:அத்தம்<br>கி.பா:53 ½ சூரி. செவ் 9 இல்<br>உயரம்:5' 6"<br>தகைமை/தொழில்: கமம், ஆட்டோ, பாதுகாப்பு உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/10069 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 3<br>கி.பா: சூரி 10 செவ் 7 இல்<br>உயரம்:5' 2"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு:அரச,தனியார் சொந்த தொழில்<br>தொ.இ: G/10359 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம் : உத்திராடம் 4<br>கி.பா: 31 ¾ சூரி . செவ் 10 இல்<br>உயரம்:5' 5"<br>தகைமை/தொழில்:வீடியோ படப்பிடிப்பாளர்<br>எதிர்பார்ப்பு : சாதாரண படித்த பெண் .<br>தொ.இ: B/10070 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: மகம் 4<br>கி.பா: 14 சூரி 4 செவ் 2 இல்<br>உயரம் : 5' 1"<br>தகைமை/தொழில்:HND,QS<br>எதிர்பார்ப்பு: படித்த மணமகன்<br>தொ.இ:G/10361 |
| பிறப்பு: 1971 இந்து<br>நட்சத்திரம் : அவிட்டம்<br>கி.பா: 41 சூரி 7 செவ் 10 இல்<br>உயரம்:5' 5"<br>தகைமை/தொழில்: உயர்தரம் நகைத் தொழில்<br>எதிர்பார்ப்பு :வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/10079 | பிறப்பு: 1984 கிறிஸ்தவம் NRC<br>உயரம் : 5' 6"<br>தகைமை/தொழில்:A/L ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ:G/10362 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
[illegible] கட்டணம் [illegible] ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

அம்புலிமாமா


## சரியான அடி!

(நேற்றைய தொடர்ச்சி)

கந்தன் அவனிடம் "ஐயோ பாவம்! இந்தக் கிழ வயதில் இப்படி சிரமப்படுகிறீர்களே. நான் உங்கள் வீட்டிற்கு இதைச் சுமந்து வருகிறேன்" என்றான்.

தச்சனும் கந்தனைப் பற்றி எல்லாம் தெரிந்து கொண்டு "சரி. நீ என்னிடம் ஒரு வருடம் வேலை செய். உனக்கு சாப்பாடு போட்டு வருட முடிவில் ஏதாவது கணிசமாகக் கொடுக்கிறேன்" என்றான். கந்தனும் சம்மதித்து ஒரு வருட காலம் தச்சனிடம் வேலை செய்தான்.

கந்தன் அவனிடம் விடைபெற்ற போது தச்சன் அவனிடம் ஒரு வெங்கலத் தட்டைக் கொடுத்து "இதை நீ தட்டி 'சாப்பாடு போடு' என்றால் உடனே நல்ல விருந்து சாப்பாட்டைக் கொடுக்கும்" என்றான்.




கந்தனும் அதன் முன் உட்கார்ந்து தட்டைத் தட்டி சாப்பாடு போடச் சொல்லவே அது உடனே நல்ல சாப்பார்ட்டைக் கொடுத்தது. அவன் அதைச் சாப்பிட்டு விட்டு திருப்தி அடைந்து தச்சனிடம் விடை பெற்றுக் கொண்டு சென்றான். வழியில் அவன் முன்பு சென்ற ஊட்டுப்பிறைக்கே சென்றான். அன்றைய இரவை அங்கு கழிக்க விரும்புவதாக அங்கிருந்த அதே கிழவியிடம் கூறவே அவள் சாப்பாட்டிற்குப் பணம் தர வேண்டும் என்றாள். கந்தனோ "எனக்கு சாப்பாடு வேண்டாம். நானே ஏற்பாடு செய்து கொள்கிறேன்" என்று கூறி மூலையில் உட்கார்ந்து தன் தட்டை எடுதத்துத் தன் முன் வைத்து தட்டி 'சாப்பாடு போடு' என்றான். மறுநிமிடம் அதில் விருந்து சாப்பாடே வந்தது.

அவனுக்கு மட்டுமல்லாமல் அந்த சாப்பாடு அங்கிருந்த அந்தக் கிழவிக்கும் அவளது மகனுக்கும் கிடைத்தது. கிழவியின் மகன் அதைக் கண்டு அந்தத் தட்டை திருடிக்கொள்ளத் தீர்மானித்தான்.

(தொடரும்)

# சிலப்பதிகாரம்

## இந்திர விழா




வீடுகள் எங்கும் ஒளி மயம். தெருவெல்லாம் வித விதமான கடைகள். எங்கு பார்த்தாலும் மக்கள் கூட்டம். ஆங்காங்கே இசை நிகழ்ச்சிகள்,நாட்டிய நிகழ்ச்சிகள் இன்னும் என்னென்னவோ.

இந்திர விழாவையொட்டி புகார்நகரத்து இளம் பெண்கள் நேர்த்தியாக ஆடை அணிந்து நகரை வலம் வந்தார்கள். அவர்களைப் பார்த்த ஆடவர்களின் மனம் தவியாகத் தவித்தது.

இத்தனை கோலாகலங்கள் போதுமா?

மாதவியின் நாட்டியம் இல்லாமல் புகார் நகரில் ஒரு விழாவா?

கண்ணைக் கவரும் ஆடை அணிகலன்களுடனும் சிறப்பான அலங்காரத்துடனும் மாதவியின் நாட்டியத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கோவலனும் அதைப் பார்க்கப் போயிருந்தான்.

ஆரம்பத்தில் அவன் மாதவியின் நாட்டியத்தைப் பெருமிதத்துடன்தான் பார்த்துக் கொண்டிருந்தான்.

அதன்பிறகு, சுற்றுப்புறத்தில் இருக்கும் ஆண்களின் பார்வையில் இருந்த ஏக்கமும் தாபமும் அவனை ... அதிர்ச்சியளித்தது.

அதன்பிறகு கோவலன் நடனத்தை கவனிக்கவில்லை.

சுற்றியிருந்த ஆண்களைத்தான் கூர் ந்து பார்த்துக் கொண்டிருந்தான். அவர்கள் மாதவியை விழுங்கி விடுவது போல் பார்த்தார்கள்.

மாதவியின் கண்கள் எதேச்சையாக அவர்கள் பார்வையைச் சந்திக்கிற போதெல்லாம் துடித்துப் போனார்கள். நாட்டியத்தின் ஊடே வந்த விரக பாவங்களைக் கிறக்கத்துடன் ரசித்தார்கள்.

கோவலனின் பெருமிதம் மெதுவாகத் தேய்ந்து போனது, பொறுமையின்மையாக ஆனது. போகப்போக ஆத்திரமாக உருவெடுத்தது.

போதாக்குறைக்கு ஆண்கள் அவளை ரசித்த போதெல்லாம் மாதவியின் உதட்டில் மெல்லிய புன்னகை மலர்ந்தது. அது கோவலனின் எரிச்சலை மேலும் அதிகப்படுத்தியது. ஆடவர்களைக் கவர்வதற்காகவே அவள் நடனத்தில் சிருங்காரம் அளவுக்கு அதிகமாக இருக்கிறதோ என்று எண்ண ஆரம்பித்தான்.

தனக்கு, தனக்கு மட்டுமே சொந்தமான மாதவியின் அழகை, அவள் அங்கங்களை, நூற்றுக்கணக்கான ஆண்கள் ரசித்தது கோவலனை நிலை குலைய வைத்தது.

அப்போது அவர்கள் மனத்தில் என்னவெல்லாம் எண்ணங்கள் ஓடும் என்று கற்பனை செய்து பார்த்தபோது துடித்துப் போனான்.

தவறான பெண்களின் சகவாசம் இருந்தாலும், நல்ல குடியில் பிறந்த ஆண்களுக்கு தங்கள் மனைவியர் குறித்த பெருமிதம் எப்போதும் இருக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் வாழ்வதோடு பிறர் வாழவும் வழிவகை செய்யுங்கள்.

*- சர் ரோஸாரிலெஸ்ட் ரேஞ்ச்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எல்லோருக்கும் எரிபொருள் கிடைக்க உதவுவதும் தெய்வத் தொண்டே!

எரிபொருள் விநியோகம் தொடர்பில் ஏகப்பட்ட இடர்பாடுகளை அரச அதிகாரிகளும் பெற்றோலியக் கூட்டுத்தாபன நிர்வாகமும் எரிபொருள் நிரப்பு நிலையங்களும் சந்தித்து வருகின்றன.

பற்றாக்குறையான எரிபொருளை பங்கீடு செய்கின்றபோது இடர்பாடுகளும் முரண்பாடுகளும் எழவே செய்யும்.

எனினும் அதனுள்ளும் தர்மம் பேணப்பட வேண்டியது அவசியம் என்பதை எவரும் மறந்துவிடக் கூடாது.

எரிபொருள் விநியோக அட்டை மற்றும் கியூஆர் கோட் நடைமுறை என்பன எரிபொருளுக்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள போதிலும் அதனைச் செம்மையாக அமுல்படுத்துவதைக் குழப்புவதில் சிலர் தீவிரமாக இருப்பதை அவதானிக்க முடிகிறது.

இத்தகையவர்களின் குழப்பக் கலாசாரம் காரணமாக அப்பாவி மக்கள் எரிபொருளைப் பெறமுடியாதவர்களாக இருக்கின்றனர்.

அதிலும் எரிபொருள் அட்டை, கியூஆர் கோட் என்பன அறிமுகப்படுத்தப்பட்ட காலத்தில் இருந்து, இதுவரையில் பெற்றோலைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் இருக்கிறார்கள் என்ற செய்தி மிகவும் கொடுமையானது.

ஆம், அதிகாலைப் பொழுதில் வரிசையில் காத்து நின்று மாலைப் பொழுதில் பெற்றோல் தீர்ந்துவிட்டது என்ற அறிவிப்போடு வீடு செல்கின்றவர்களின் நிலைமை மிகவும் வேதனைக்குரியது.

இவ்வாறு அதிகாலை முதல் மாலை வரை கால்கடுக்கக் காத்து நின்றவர்களுக்கு அன்றைய தினம் பெற்றோல் கிடைக்கவில்லையாயினும் மறுநாளாவது அவர்கள் முதன் நிலையில் பெற்றோலைப் பெறுவதற்கு ஏதேனும் ஏற்பாடுகள் - முன்னுரிமைகள் செய்யப்படுகின்றனவா என்றால் அதுவும் இல்லை.

இதுதவிர, மாலை 5 மணி ஆனதும் பெற்றோல் முடிந்துவிட்டது என்ற அறிவிப்பில் ஏதேனும் நியாயம் உண்டா என்று அரச அதிகாரிகளும் எரிபொருள் விநியோகத்தில் ஈடுபடுபவர்களும் ஒரு கணம் சிந்திக்க வேண்டும்.

எரிபொருள் வழங்கலில் ஈடுபட்டுள்ள அரச உத்தியோகத்தர்கள் பணி முடிந்து வீடு செல்வதற்காகவே பெற்றோல் முடிந்துவிட்டது என்ற அறிவிப்பு விடுக்கப்படுவதாக பலரும் பேசிக் கொள்கின்றனர்.

உண்மையில் எரிபொருள் விநியோகப் பணியில் ஈடுபடுகின்ற பிரதேச செயலகப் பணியாளர்கள் பகல் கடமையை நிறைவு செய்துவிட்டு மாலையில் வீடு திரும்பும் அதே நேரம் தொடர்ந்து எரிபொருளை விநியோகிப்பதற்கான அடுத்த ஆளணியை சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்கள் ஏற்பாடு செய்யுமாயின் பெற்றோல் விநியோகம் தொடர்ச்சியாக இடம்பெறும்.

எது எவ்வாறாயினும் முதல் நாளேயே வரிசையில் இடம்பிடிக்கும் நடைமுறை வல்லவன் பம்பரம் மணலில் சுற்றுவது போன்றது.

ஆகையால் அப்பாவிப் பொதுமக்களும் பெற்றோலைப் பெறுவதற்கு அனைத்துத் தரப்பும் உதவி செய்ய வேண்டும்.

இல்லையேல் அவர்கள் எரிபொருளுக்காக விடுகின்ற பெருமூச்சு எரிமூச்சாக நம்மை சுடும்.

# நல்லூர் திருவிழாக் காலங்களில் சைவத் தமிழ் பண்பாட்டை பேணுங்கள்

## கலாநிதி ஆறு.திருமுருகன் கோரிக்கை

(குப்பிழான்)

**நல்லூர்க் கந்தன் திருவிழா காலத்தை சகல மக்களும் புனிதமாகப் பேணுங்கள் எனத் தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலயத் தலைவர், செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் நேற்றுத் திங்கட்கிழமை ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

குடும்பம் குடும்பமாக ஆலய தரிசனம் செய்யுங்கள். பண்பாட்டு உடைகளோடு வாருங்கள். வழிபாட்டுக்கு உரிய உடைக்கு மாறாக வருபவர் ளால் ஏற்படும் இடையூறு வெறுக்கத்தக்கது. சுற்றுலாவிற்கு வரும் காலமல்ல. மனதைச் சுத்தப்படுத்தி மாசிலா வாழ்வு கேட்கும் காலம் இது.

இரண்டு ஆண்டுகள் பெரு விழாக் காலத்தை நாம் உலகத்தில் ஏற்பட்ட கொடிய நோயால் இழந்துவிட்டோம். இம்முறையும் நோய்களின் அச்சம் பற்றிய கருத்து உலா வுகிறது. எனவே, எங்களை நாங்கள் காத்துச் செயற்பட வேண்டும்.

ஆடம்பரங்களைத் தவிருங்கள். அதிக ஆபரணங்களை அணிந்து கொள்வதைத் தவிர்த்து உதவுங்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-18)

# எரிபொருள் விநியோகத்தை துரிதப்படுத்த QR நடைமுறை

## வரிசையில் இடம்பிடிப்பவர்களால் விசனம்

(சாவகச்சேரி)

நாடளாவிய ரீதியாக சகலருக்கும் எரிபொருள் கிடைப்பதனை உறுதிப்படுத்தும் முகமாகவும் இவ் விநியோகத்தை இலகுபடுத்தும் முகமாகவும் QR முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள போதிலும் நேற்று திங்கட்கிழமை எரிபொருள் பெறுவதற்காக எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசையில் நாள் கணக்கில் மோட்டார் சைக்கிள்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

திங்கட்கிழமை எரிபொருள் விநியோகம் எங்கெங்கு இடம்பெறும் என்பதனை முன்கூட்டியே அறிந்த பலர் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் தொடக்கம் வரிசையில் நிற்க ஆரம்பித்துள்ளனர்.

இதனால் பெண்கள், முதியவர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் எரிபொருள் பெறுவதற்கான சாத்தியப்பாடுகள் குறைந்திருப்பதாக சமூக ஆர்வலர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். (நி-30)

# இலங்கை வரும் சீனக்கப்பல்; இந்தியா தீவிர கண்காணிப்பு

(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறைமுகத்தை எதிர்வரும் 11 ஆம் திகதி வந்தடையவுள்ள சீன ஆராய்ச்சிக் கப்பலை இந்திய கடற்படை கண்காணித்து வருவதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

செயற்கைக் கோள்கள், ரொக்கெட்டுகள், கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள் போன்றவற்றை கண்காணிக்கும் நவீன கருவிகளைக் கொண்ட இந்தக் கப்பல் இலங்கைக்கு வருவது குறித்து இந்தியா தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

இந்த கப்பல் 750 கிலோமீற்றருக்கும் அதிகமான வான்வழி அணுகல் கண்காணிப்பு திறனைக் கொண்டுள்ளது. எனவே இது தென்னிந்தியாவில் உள்ள கல்பாக்கம் மற்றும் கூடங்குளம் போன்ற இந்திய அணு ஆராய்ச்சி மையங்களைக் கண்காணிக்கும் திறன் கொண்டது என்று இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கேரளா, தமிழ்நாடு, ஆந்திரா உள்ளிட்ட துறைமுகங்கள் உட்பட சீனாவால் கண்காணிக்கப்பட வாய்ப்பு உள்ளதால், இந்தியாவின் பல இடங்களில் இருந்து தகவல்களை சேகரிக்க சீனாவுக்கு வாய்ப்பு உள்ளதாகவும் இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (நி)

# கோவிட் தொற்று; மேலும் மூவர் பலி

நாட்டில் மேலும் 3 கோவிட் இறப்புக்கள் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் நேற்று முன்தினம் இந்த இறப்புக்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இதுவரை பதிவான கோவிட் இறப்புக்களின் மொத்த எண்ணிக்கை 16,559 ஆக அதிகரித்துள்ளது. (ம-7)

# கொரோனாத் தொற்று 108 பேர் அடையாளம்

கொரோனாத் தொற்று உறுதியான மேலும் 108 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 665,847ஆக அதிகரித்துள்ளது. (ம-7)

## கட்சி அரசியலை மேற்கொண்டால்

# நாட்டுக்கு எதிர்காலம் இல்லாமல் போய்விடும்

## ருவான் விஜயவர்தன

தொடர்ந்தும் கட்சி அரசியலை மேற்கொண்டால் நாட்டுக்கு எதிர்காலம் இல்லாமல் போய்விடும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜயவர்தன தெரிவித்தார்.

நாடு பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்து, மிக மோசமான காலகட்டத்தை எதிர்கொண்டு வருவதாக சுட்டிக் காட்டினார்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ருவான் விஜயவர்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடு மீள வேண்டுமானால் பாராளுமன்றத்தில் உள்ள அனைத்து கட்சி பிர்திநிதிகளும் ஒன்றிணைய வேண்டும் என ருவான் விஜயவர்தன தெரிவித்தார்.

கடந்த காலங்களை போன்று மதம் மற்றும் இன ரீதியாக பிரிந்திருந்து நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியாது என்றும் ருவரன் விஜயவர்தன குறிப்பிட்டார்.(ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 41

முதல் பாராளுமன்றத்தில் இருந்த பிரதம மந்திரிகள் 1991-1993



விட்டோல்ட் ஃபோகின் (1991–1992) வாலன்டின் சிமோனென்கோ (பதவிநிலை 1992) லியோனிட் குச்மா (1992–1993)

| தேர்தல் தொகுதிகள் – பாராளுமன்றத் தேர்தல் -1994 உரு-1 | | | |
|---|---|---|---|
| மேற்கு உக்ரைன் மாநிலங்கள் | | மத்திய உக்ரைன் மாநிலங்கள் | |
| வாலின் | 9 | சைதோமிர் | 13 |
| ரைவன் | 10 | கீவ் | 16 |
| க்மெள்னிட்சிகி | 13 | செர்னிஹிவ் | 12 |
| தெர்னாபில் | 10 | சுமி | 13 |
| லிவிவ் | 23 | போல்தாவா | 16 |
| சாகர்பாசியா | 10 | செர்கசி | 13 |
| ஐவனோ-பிரான்கிவிஸ்க் | 13 | வின்னிதிசியா | 17 |
| செர்னியிவ் | 8 | கீரோவராத் | 11 |
| கிழக்கு உக்ரைன் மாநிலங்கள் | | தெற்கு உக்ரைன் மாநிலங்கள் | |
| கார்கிவ் | 28 | தினிபிராபிட்ரோவஸ்க் | 34 |
| லுகன்ஸ்க் | 25 | ஒடேசா | 23 |
| தோனேஸ்க் | 47 | மைகோலைவ் | 11 |
| கிரிமியா குடியரசு | 19 | கேர்சன் | 11 |
| செவாஸ்டோபோல் நகரம் | 4 | சாப்ரோசியா | 18 |
| கீவ் நகரம் | 23 | மொத்தம் | 450 |

அதன் பிரகாரம் ராடா பாராளுமன்றத் தேர்தலை திட்டமிடப்பட்ட நேரத்திற்கு முன்னும், (யூன் மாதம் திட்டமிடப்பட்ட ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னும்) நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதன்படி 27 மார்ச் 1994 இல் பாராளுமன்றத் தேர்தல்கள் நடத்தப்பட்டன.

முந்தைய தேர்தலைப் (1990) போலவே இந்தத் தேர்தல்களும் பெரும்பான்மையான தேர்தல் முறையின்படி பல வலயங்களைக் கொண்ட 450 தேர்தல் மாவட்டங்களில் நடைபெற்றன. ஒவ்வொரு மாநிலத்திற்கும் அதன் மக்கள் தொகையைப் பொறுத்து தேர்தல் தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. எனவே உக்ரைனின் அதிக மக்கள் தொகை கொண்ட கிழக்குப் பகுதிகள், குறிப்பாக டோனெட்ஸ்க் மாநிலம் மற்றும் டினிப்ரோபெட்ரோவ்ஸ்க் மாநிலம் போன்றவற்றில் அதிக தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. தொகுதி ஒதுக்கீட்டை உரு 1ல் பார்க்க.

எந்த வேட்பாளரும் முதல் சுற்றில் 50%க்கு மேல் பெறவில்லை என்றால், முதல் இரண்டு வேட்பாளர்கள் இரண்டாவது சுற்றில் வாக்குச் சீட்டில் பட்டியலிடப்படு வர். இரண்டாவது சுற்றிலும் 50% விதி பயன்படுத்தப்படும். இரண்டாவது சுற்றில் 50% வாக்குகள் கிடைக்காவிட்டால் மறுதேர்தல் நடத்தப்படும்.

மார்ச் 1994 இல் நடத்தப்பட்ட தேர்தலின் இரண்டாவது சுற்று ஏப்ரல் 2 மற்றும் 10 க்கு இடையில் நடைபெற்றது. 15 அரசியல் கட்சிகள் ஆசனங்களைப் பெற்றன. மற்றும் பெரும்பான்மையான பிரதிநிதிகள் சுயேச்சைகளாக இருந்தனர். இருப்பினும், 112 இடங்கள் நிரப்பப் படாமல் இருந்தன.

மிகுதி இடங்களை நிரப்புவதற்கு ஜுலை, ஓகஸ்ட், நவ ம்பர் மற்றும் டிசெம்பர் 1994 மற்றும் டிசெம்பர் 1995 மற்றும் ஏப்ரல் 1996 இல் இடைத் தேர்தல்கள் தேவைப்பட்டன. பாராளுமன்றத்தில் முந்நூறு (300) இடங்கள் அல்லது மூன்றில் இரண்டு பங்கு (2/3) பாராளுமன்றம் நிரப்பப்பட்டிருத்தல் வேண்டும்.

**உக்ரைன் தேர்தல் முறைமையின் கீழ் ஒரு வேட்பாளர் பாராளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு**

**50% க்கும் அதிகமான வாக்குகளைப் பெற வேண்டும் மற்றும் தேர்தல் செல்லு படியாகும் வகையில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களில் 50% க்கும் அதிகமானோர் வாக்களிக்க வேண்டும்.**

(தொடரும்)

# ஒசாமாவிடம் இருந்து நிதியுதவி பெற்றாரா இளவரசர் சார்லஸ்?

## சர்வதேச பத்திரிகை செய்தி வெளியீடு



(லண்டன்)

பயங்கரவாதி ஒசாமா பின் லேடன் குடும்பத்திடம் இருந்து இளவரசர் சார்லஸ் நிதியுதவி பெற்றதாக அதிர்ச்சியூட்டும் தகவல் வெளியாகியுள்ளது.

சர்வதேச பத்திரிகை ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில், ஒசாமாவின் சகோதரரான ஷீக் பின்லேடனிடம் இருந்து 2013 ஆம் ஆண்டு ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இந்த தொகை, பிரின்ஸ் ஆஃப் வேல்ஸ் அறக்கட்டளைக்கு சென்றதால், தனிப்பட்ட காரணங்களுக்காக பயன்படுத்தப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

பின்லேடன் குடும்பத்தினரிடம் இருந்து பெருந்தொகை நன்கொடையாக பெறுவது அரச குடும்பத்திற்கு சிக்கலை ஏற்படுத்தும் என அப்போது அரண்மனை அதிகாரிகள் தரப்பு எச்சரித்ததாக கூறப்படுகிறது.

இந்த விவகாரம் தற்போது பேசுபொருளாகியுள்ள நிலையில், இதுவரை இளவரசர் சார்லஸ் தரப்பில் இருந்து எந்த ஒரு அறிக்கையும் இதுவரை வெளியிடப்படவில்லை. (நி)

# இந்தியாவில் குரங்கம்மையால் முதல் மரணம் பதிவானது

(டில்லி)

இந்தியாவில் குரங்கம்மையால் முதல் மரணம் பதிவாகியுள்ளது. ஐக்கிய அரபு அமீரகத்தில் இருந்து கடந்த வாரம் கேரளா வந்த நிலையில் சிகிச்சை பெற்று வந்த இளைஞனே கடந்த சனிக்கிழமை உயிரிழந்ததாக கேரள சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

உயிரிழந்த 23 வயதான இளைஞன் வெளிநாட்டிலிருந்து திரும்பிய போது குரங்கம்மைத் தொற்று அறிகுறிகளைக் கொண்டிருக்கவில்லை. அவருக்கு ஐக்கிய அரபு அமீரகத்தில் நடத்தப்பட்ட சோதனையில் குரங்கம்மை உறுதி செய்யப்பட்ட அறிக்கையை இளைஞனின் உற வினர்கள் அவர் இறந்த பின் னரே ஒப்படைத்ததாக கேரள சுகாதர அமைச்சு தெரிவித்துள்ளது. (நி)

# தானியங்களை ஏற்றிய முதல் கப்பல் உக்ரைன் துறைமுகத்திலிருந்து புறப்பட்டது

(கீவ்)

தானியங்களை ஏற்றிச் செல்லும் முதல் கப்பல் உக்ரைன் துறைமுகத்திலிருந்து உலக உணவு நெருக்கடியைத் தணிக்கும் நோக்கில் புறப்பட்டது.

கருங்கடல் வழியாக உக்ரைன் தானிய ஏற்றுமதியை மீண்டும் தொடங்க கடந்த ஜுலை 22ஆம் திகதி, ரஷ்யாவுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டது.

இந்தத் திட்டத்தில், உக்ரைனிய கப்பல்கள் தானியக் கப்பல்களை துறைமுக நீர் வழியாக உள்ளேயும் வெளியேயும் வழிநடத்துகின்றன.

ஏற்றுமதி நகரும் போது ரஷ்யா ஒரு போர்நிறுத்தத்திற்கு ஒப்புக்கொள்கிறது. துருக்கி - ஐக்கிய நாடுகள் சபையின் ஆதரவுடன் ஆயுதக் கடத்தல் குறித்த ரஷ்ய அச்சத்தைப் போக்க கப்பல்களை ஆய்வு செய்கிறது. கருங்கடல் வழியாக தானியங்கள் மற்றும் உரங்களை ரஷ்ய ஏற்றுமதி செய்வதற்கும் இந்த ஒப்பந்தம் உதவுகிறது.

ரஷ்யாவின் படையெடுப்பிற்குப் பிறகு உக்ரைனிய தானியங்களின் உலகப் பற்றாக்குறை மில்லியன் கணக்கானவர்களை பட்டினி ஆபத்தில் ஆழ்த்தியுள்ளது.

படையெடுப்பு, உணவு விலைகளை உயர்த்தியது எனவே, உக்ரைனின் துறைமுகங்களைத் தடுப்பதற்கான ஒப்பந்தம் முக்கியமானது. ஒடேசாவில் சுமார் 20 மில்லியன் தொன் தானியங்கள் இருப்புகளில் சிக்கியுள்ளன. (நி)


# பைடனுக்கு மீண்டும் கொரோனா

(வோஷிங்டன்)

அமெரிக்க-ஜனாதிபதி ஜோ பைடனுக்கு கொரோனாத் தொற்று மீண்டும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஏற்கெனவே கொரோனாவுக்கு சிகிச்சை பெற்று வந்த அவர் 3 நாட்களுக்கு முன்னர் குணமடைந்துள்ளார்.

இந்நிலையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுக்கு மீண்டும் கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.



இதுதொடர்பாக நேற்று வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், "ஜுலை 26 ஆம் திகதி, செவ்வாய் அன்று கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்ட பிறகு, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கடந்த சனிக்கிழமை காலை மீண்டும் பரிசோதனை செய்து கொண்டார்.

அதில் கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது" என்றும் இதனால் மீண்டும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சையில் உள்ளார் என்று மருத்துவர் குழு தெரிவித்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டீசலின் விலை...

மேலும் லங்கா ஐ.ஓ.சி நிறுவனமும் டீசல் விலையை 10 ரூபாயினால் குறைத்துள்ளது. (ம-7)

## செயற்பாட்டாளர்...

நேற்று கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவுக்கு வாக்குமூலம் வழங்க வந்த வேளையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, ரதிந்து சேனாரத்ன உள்ளிட்ட மூவருக்கு வெளிநாட்டுப் பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு - கோட்டை நீதிவான் நீதிமன்றினால் இந்த உத்தரவு நேற்று பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## நல்லூர் கந்தனு...

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் இன்று காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 25 நாட்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 11 ஆம் திகதி வியாழக் கிழமை மஞ்சமும் 25 ஆம் திகதி இரதோற்சவமும் மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தமும் இடம்பெறவுள்ளது.

அனைவரும் சுகாதார நடைமுறையைப் பின்பற்றி மகோற்சவத்தில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## சூழ்ச்சிக்காரர்க...

கட்சியின் தலைமையகத்தில் நேற்று ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"கட்சியிலிருந்து வெளியே சென்ற சிலர், நிலைமையை உணர்ந்து எம்மிடம் மன்னிப்புக் கோரியுள்ளனர். மீள வருவது குறித்து பேச்சு நடத்துகின்றனர். இவர்கள் குறித்து எமக்குப் பிரச்சினை இல்லை. எனினும், சூழ்ச்சிக்காரர்கள் நீக்கப்படுவார்கள். அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கட்சி என்ற அடிப்படையில் நாம் முன்னோக்கிப் பயணிப்போம். சூழ்ச்சிக்காரர்கள் யாரென்பது நான் பெயர் குறிப்பிட்டுக் கூற விரும்பவில்லை. அவர்கள் யாரென்பதும், அவர்களால் தவறாக வழிநடத்தப்பட்டவர்கள் யாரென்பதும் மக்களுக்குத் தெரியும்" என்றார். (ம-7)

## சிறுபான்மை...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல்வாதிகள் வேலை வாய்ப்பை தங்களால் உருவாக்க முடியாதபோது அதனை மறைப்பதற்காக சிறுபான்மையினத்தவர்களை தாக்குவதால் ஏற்படக் கூடிய விளைவுகளை இலங்கை அனுபவிக்கின்றது.

வேலைவாய்ப்பு நெருக்கடியிலிருந்து கவனத்தை திசைதிருப்புவதற்காக அரசியல்வாதிகள் சிறுபான்மையினத்தவர்களை தாக்குவதால் என்ன நடக்கும் என்பதற்கு இலங்கை உதாரணம் எனவும் தெரிவித்துள்ளார்.

பாரிய சிறுபான்மையினத்தவர்களை இரண்டாம் தர பிரஜைகளாக மாற்றும் முயற்சிகள் நாட்டை பிளவுபடுத்தும் என அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## 22ஆவது திருத்த...

ரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுப்படுத்தி, பாராளுமன்றத்தின் அதிகாரத்தை பலப்படுத்தும் வகையில் 22 ஆவது திருத்தச்சட்டமூல வரைபு மீண்டும் திருத்தம் செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் நீதியமைச்சர் அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தச்சட்டமூல வரைபினை சமர்ப்பித்தார்.

வர்த்தமானி அறிவித்தல் ஊடாக உறுதிப்படுத்தப்பட்ட அரசியலமைப்பின் 22ஆவது திருத்தத்தில் ஒருசில விடயங்கள் திருத்தங்களுக்குட்படுத்தப்பட வேண்டும் என அரசியல் கட்சிகள் முன்வைத்த யோசனைகளுக்கமைய நீதியமைச்சர் சட்டமூல வரைபில் திருத்தங்களை முன்வைத்துள்ளார்.

நீதியமைச்சர் சமர்ப்பித்த சட்டமூல வரைபிற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. 22ஆவது திருத்தச்சட்ட வரைபு திருத்தம் செய்யப்பட்டு வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டதை தொடர்ந்து, இவ்வார காலத்திற்குள் பாராளுமன்றிற்கு சமர்ப்பிக்க எதிர்பார்ப்பதாக நீதியமைச்சர் குறிப்பிட்டார்.

வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 22ஆவது திருத்தம் தொடர்பில் அரசியல் கட்சிகள் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளன. அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்துடனான அரசியலமைப்பு திருத்தம் செய்யப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியல் கட்சி தலைவர்களிடம் தொடர்ந்து வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## இராணுவம்...

கீழ் போராட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன, எனினும் போராட்டங்கள் என்ற போர்வையில் வன்முறையில் ஈடுபடுவோருக்கு எதிராக அதிக பட்ச பலம் பிரயோகிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

கடந்த வாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நடைமுறையிலுள்ள அவசர காலச் சட்டம் தொடர்பில் விளக்கமளிக்க அரசாங்கத்தின் பாராளுமன்றக் குழுவை அழைத்திருந்தார்.

அங்கு விசேட உரையாற்றிய கமால் குணரத்ன, தற்போதைய நிலைமையை தானும் பாதுகாப்பு தரப்பினரும் மூன்று மாதங்களாக பொறுத்துக்கொண்டதாக தெரிவித்துள்ளார்.

இராணுவம் பொறுமை காத்திருப்பது கோழைத்தனம் என சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் நினைத்துக் கொண்டிருப்பதாக அவர் கூறியுள்ளார்.

எதிர்காலத்தில் எவரேனும் அரச சொத்துக்களுக்கு அல்லது அரசாங்க அலுவலகங்களுக்கு சேதம் விளைவிக்க முற்பட்டால், அவசரகால சட்ட விதிமுறைகளின் அதிகபட்ச பலம் பயன்படுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## தென்னிலங்கை...

ரயில் சேவைகள் முடங்கியதோடு மீனவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு தொடக்கம் பெய்து வரும் கடும் மழையினால் , அம்பகமுவ பொல்பிட்டிய பிரதேசத்தில் நீரில் அடித்துச் செல்லப்பட்டதில் 61 வயதுடைய பெண் ஒருவரும் 05 வயதுடைய முன்பள்ளிச் சிறுமியும் உயிரிழந்துள்ளனர்.

சீரற்ற காலநிலையால், மண்சரிவு மற்றும் பாறைகள் சரிந்து வீதிகளில் விழுந்தமையால் பல வீதிகள் மூடப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரஞ்சித் அழககோன் தெரிவித்தார்.

மேலும் சீரற்ற காலநிலை காரணமாக மலையகத்துக்கான ரயில்சேவைகள் முழுமையாக முடங்கியுள்ளதாக ரயில் நிலைய அதிபர்கள் சங்க செயலாளர் தெரிவித்தார்.

ரயில் பாதையில் மரங்கள் முறிந்து விழுந்துள்ளதுடன், மண்மேடுகளும் சரிந்து விழுந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மற்றும் மறு அறிவித்தல் வரை மீன்பிடி மற்றும் கடற்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என வளிமண்டலவியல் திணைக்களம் மீனவர்களுக்கு அறிவித்துள்ளது.

அதன்படி புத்தளத்திலிருந்து கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் மீன்பிடியில் ஈடுபடுபவர்களுக்கு இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

## மானிப்பாயில்...

உள்ளதாக மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்டு மோட்டார் ஸ்சக்கிள்கள் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது.

விபத்தில் காயமடைந்தவர்கள் அருகில் இருந்தவர்களின் உதவி மூலம் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7.104)

## மக்களின் நம்பிக்...

சிம்மாசன பிரசங்கத்தில் ஜனநாயக பாதுகாப்பு, பொருளாதார மீட்சிக்கான திட்டங்கள் தொடர்பில் தெளிவாக விளக்கம் காணப்படும் என எதிர்பார்க்கிறோம்.

ஜனாதிபதி தேர்தல் அல்லது பொதுத் தேர்தல் இடம்பெறும் வரையில் நிர்வாகத்தில் உள்ள அரசாங்கத்தில் ராஜபக்ஷர்களுக்கும், ஊழல் மோசடியாளர்களுக்கும் எவ்வித அமைச்சு பதவிகளும் வழங்கக் கூடாது.

மக்களால் வெறுக்கப்படுபவர்களை மீண்டும் அதிகாரத்தில் அமர்த்தினால் மக்கள் போராட்டம் மீண்டும் தீவிரமடையும் என்றார். (ம-7)

மஹஜன சம்பத
திகதி 2022/08/01
சீட்டிழுப்பு இலக்கம் 4834
B 7 2 3 6 1 4
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2022.08.01
சீட்டிழுப்பு இலக்கம் 143
விருச்சிகம் 14 16 43 55 விருச்சிகம்
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 01/08/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1182
Z 01 20 41 46 68

கொவிசெத
திகதி 2022.08.01
சீட்டிழுப்பு இலக்கம் 3076
M 25 37 62 77
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2022.08.01
சீட்டிழுப்பு இலக்கம் - 864
J 22 24 45 73
தேசிய லொத்தர் சபை

அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 1635
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2022.08.01
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,007,840/-
06 13 21 26 P
www.dlb.lk

சனிதா Shanida
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.08.01
சீட்டிழுப்பு இல: 3970
வர்ணம்: நீலம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,706,380/-
வெற்றி இலக்கங்கள் 06 21 45 75 Q

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 5,285,282/-
திகதி 2022-08-01
வெற்றி வாரம் 3521
வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 01 15 25 47
துலாம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 6,423,580/-

25 லக்ன வாசனா
சீட்டிழுப்பு வாரம் 985
வர்ணம் இள நீலம்
திகதி 2022.08.01 திங்கட்கிழமை
D 36 16 24 39 74
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 251,025,439/-
தொலை பேசி: 011-2 333 546-47
Web: www.dlb.lk

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1840
சீட்டிழுப்பு திகதி 2022-08-01
வெற்றி இலக்கங்கள் 02 05 25 68 E
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 34,305,792/-
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1809
நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2022.08.01
தினம் திங்கட்கிழமை
P 11 43 62 63
வெல்லப்பட்ட மொத்தம் பரிசுத் தொகை ரூ. 2,281,260/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திய ரணிலால் ஆர்ப்பாட்டக்காரர்களிடம் பேசமுடியாதா?



## முஜிபுர் ரகுமான் கேள்வி

(கொழும்பு)

விடுதலைப் புலிகளிடம் சமாதான பேச்சுவார்த்தை நடத்திய ரணிலால் ஏன் ஆர்ப்பாட்ட இளைஞர்களிடம் பேச முடியவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரகுமான் கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றிலே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அன்று 2001 ஆம் ஆண்டு இந்த நாட்டில் ஜனாதிபதியாக சந்திரிகா பண்டாரநாயக்க தலைமையின் கீழ் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவி ஏற்று அரசாங்கத்தை உருவாக்கியதன் பின்னர் இந்நாட்டில் போராடிய விடுதலைப் புலிகளுடன் அவர்கள் சமாதான ஒப்பந்தம் செய்தனர்.

சமாதான ஒப்பந்தம் மட்டுமல்ல அவசரகால சட்டத்தையும் அவர்கள் எடுத்தனர். அப்படியென்றால் அன்று அவர்களால் விடுதலைப் புலிகளுடன் சமாதான பேச்சுவார்த்தையை மேற்கொள்ள முடியும் என்றால், அவர்களை விட மிக மோசமாக இருக்கின்றதா இன்று நாட்டில் இருக்கக்கூடிய இந்த இளைஞர்களுடைய ஜனநாய போராட்டம் என நாங்கள் இந்த அரசாங்கத்திடம் கேட்க விரும்புகின்றோம்.

எனவே இன்று இந்த நாட்டில் நடக்கக்கூடிய இந்த அநியாயங்களுக்கு எதிராக, அவசரகால சட்டத்திற்கு எதிராக இந்த நாட்டில் இருக்கக்கூடிய இயக்கங்கள் பல கட்சிகள் பல தொழிற்சங்கள் செய்யக்கூடிய இந்த போராட்டத்திற்கு நாங்களும் ஆதரவு வழங்குகின்றோம் என தெரிவித்தார். (ம-7)

## 3 இலட்சம் யூரோ இத்தாலி உதவி

உணவுப்பாதுகாப்பை மேம்படுத்தும் நோக்கில் இலங்கைக்கு 300,000 யூரோக்கள் பெறுமதியான அவசர உதவியை வழங்க இத்தாலி தீர்மானித்துள்ளதாக கொழும்பிலுள்ள இத்தாலிய தூதரகம் தெரிவித்துள்ளது.

“உலக உணவுத் திட்டம் (WFP) மூலம் இந்த நிதிப் பங்களிப்பு வழங்கப்படும், மேலும் உணவு உதவி மற்றும் மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு வவுச்சர்களை விநியோகித்தல் ஆகிய வேலைத்திட்டங்கள் இந்நிதி மூலம் மேற்கொள்ளப்படும் என்று தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

### ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (12318)

076 825 7716 (ஆகாஸ்)

### வேலைவாய்ப்பு

இலங்கையின் முன்னணி The Inner Circle நிறுவனத்தின் வடக்கு மாகாண கிளைக்கான பதவி வெற்றிடங்கள் கோரப்படுகின்றன.

O/L & A/L
வயது : 18 - 28

பதவி வெற்றிடங்கள்

- அலுவலக உதவியாளர்
- நிர்வாக உத்தியோகத்தர்
- மேற்பார்வையாளர்
- உதவி முகாமையாளர்
- Bike Rider
- Tele Caller

பெற்றுக்கொள்ளும் சலுகைகள்

- E.P.F & E.T.F
- அடிப்படைச் சம்பளத்துடன் 40,000/= இற்கும் அதிக வருமானம்
- தெற்காசியாவின் உயர்மட்ட தொலைத்தொடர்பு பிரதிநிதியாக செயற்படும் வாய்ப்பு

தொடர்பு - 076 770 7759
WhatsApp - 077 782 4807
(12321)



### உடனடி வேலை வாய்ப்புக்கள்

EXECUTIVE OFFICER

- சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- வயது-22 தொடக்கம் 35
- தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது) (C-4659)

V2 TRAVELS

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம். 0777-068-777

### VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்

- ONLINE APPLICATIONS
- VISA APPOINTMENTS
- PASSPORT APPLICATION
- POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-4659)

STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS
0777-068-777

### காணி விற்பனைக்கு

யாழ். நாவற்குழி சந்தியில் 57 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

- A9 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்.
- நாவற்குழி சந்தியில் இருந்து 500m தூரத்தில்.
- மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- A9 வீதியில் இருந்து 200m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை மூன்று இலட்சம் (300,000/=) மட்டும்.
- இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள், களஞ்சியசாலைகள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்.
- யாழ். பஸ் நிலையத்தில் இருந்து 4Km தூரம்.

பார்வையிடும் நேரம் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

076 490 5403, 076 491 2493, 076 490 6029 (12311)

### வேலையாட்கள் தேவை

யாழ். மாவட்டத்தில் இயங்கும் ஆடைத் தொழிற்சாலை ஒன்றிற்கு

- தையல் வேலை
- மேற்பார்வையாளர்கள்

உடன் தேவை.

- தங்குமிட வசதி உண்டு.
- ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரிந்தவர்களுக்கு முன்னுரிமை.
- சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
- பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
- பேருந்து, புகையிரத பருவச் சீட்டு பெற்றுக் கொடுக்கப்படும். (12317)

Viber, Whatsapp : 077 670 1495
Call : 077 748 2444

### பணியாளர் தேவை

யாழ். நகரில் இயங்கும் எமது புடைவை நிறுவனத்திற்கு அனுபவம் உள்ள விற்பனையாளர் தேவை.

சிவகணேசன் TEX TILES
இல.41, பெரிய கடை,
யாழ்ப்பாணம். (12322)


## மரண அறிவித்தல்

### கணபதி செல்வரத்தினம்

(ஓய்வுநிலை ஊழியர் - யாழ்ப்பாணக் கல்லூரி)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1950.11.09 | 2022.07.30 |



அராலி மேற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கல்லூரி வீதி, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி செல்வரத்தினம் கடந்த (2022.07.30) சனிக்கிழமை இறையடி சேர்ந்து விட்டார்.

அன்னார் அமரர் கணபதி - பொன்னி தம்பதிகளின் அன்பு மகனும் அமரர் செல்லப்பா - பூமணி தம்பதிகளின் அருமை மருமகனும் பொன்மலரின் பாசமிகு கணவரும் கருணானந்தன் (அலுவலக உதவியாளர் - யாழ்ப்பாணக் கல்லூரி), கிருஷாந்தினி (பெல்ஜியம்), காந்தரூபன் (சாரதி - தனியார் பேருந்து), வசந்தினி (ஆசிரியை - யா/வட்டு மேற்கு அ.மி.த.க.பாடசாலை), விஜேந்தினி (முன்னாள் மலரும் மலர்கள் முன்பள்ளி ஆசிரியை) ஆகியோரின் அன்புத் தந்தையும் அலைமகள், விமலராசா (பெல்ஜியம்), மோகனராசா (ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை), தயாபரன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் மாமனாரும் சபித்தா, பிரணவன், டாருகன், கேஸ்னிகா (பெல்ஜியம்), குகேஷ்ரா ஆகியோரின் பாசமிகு பேரனும் அமரர் சிவபாக்கியம், அமரர் துரைச்சாமி அமரர் இலட்சுமணன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (2022.08.03) புதன்கிழமை காலை 8 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்துத்துறை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
தொடர்பு - காந்தன் (மகன்)
077 133 3636
(C-4688)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### உதயகுமார் கமலாராணி



தோற்றம்: 23.04.1953
மறைவு: 13.08.2021

ஆண்டொன்று நகர்ந்தாலும்
நம்மைவிட்டு அகலாது
உங்கள் நினைவு
நினைவுகள் வருகையில்
நிலைகுலைந்து போகின்றோம்
உங்களை நினைக்காத
நொடிகளில்லை.

சூராவத்தை,
சுன்னாகம்.

குடும்பத்தினர் (12319)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.08.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.